RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI


தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 297 | அக்டோபர்.28 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5




## இந்தியா, ஆசியான் அமைப்பின் நூற்றாண்டு இது: உச்சி மாநாட்டில் காணொலியில் பங்கேற்ற பிரதமர் மோடி கருத்து

புதுடெல்லி, அக்.28-

21ம் நூற்றாண்டு இந்தியா, ஆசியான் அமைப்பின் நூற்றாண்டு ஆகும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஆசியான் அமைப்பில் மலேசியா, இந்தோனேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட 10 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இந்த அமைப்பின் 3 நாள் உச்சி மாநாடு மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் நேற்று தொடங்கியது. இதன் ஒரு பகுதியாக ஆசியான் இந்தியா உச்சி மாநாடு நேற்று நடைபெற்றது. இதில் பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலாக பேசியதாவது: உலக மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதி மக்கள் இந்தியா, ஆசியான் நாடுகளில் வசிக்கின்றனர். இந்தியா, ஆசியான் நாடுகள் இடையே ஆழமான நட்புறவு நீடிக்கிறது. கலாச்சாரரீதியாக நாம் ஒரே பாதையில் பயணம் செய்கிறோம்.

இந்தியாவின் கிழக்கத்திய கொள்கையின்படி ஆசியான் நாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த கூட்டமைப்பின் ஒத்துழைப்பால் இந்திய, பசிபிக் பெருங்கடல் பகுதியில் சுதந்திரமான கடல் போக்குவரத்தை உறுதி செய்ய முடியும். குளோபல் சவுத் கூட்டமைப்பில் இந்தியாவும் ஆசியான் நாடுகளும் உறுப்பினர்களாக உள்ளன. வணிகரீதியாக மட்டுமன்றி கலாச்சாரரீதியாகவும் நாம் இணைந்திருக்கிறோம்.

உணவு பாதுகாப்பை உறுதி செய்வதிலும் பருவநிலை மாறுபாட்டை தடுப்பதிலும் இந்தியா, ஆசியான் அமைப்பு ஒன்றிணைந்து செயல்பட்டு வருகின்றன. பேரிடர் காலங்களிலும் இரு தரப்பும் பரஸ்பரம் உதவி செய்து வருகின்றன. கல்வி, சுற்றுலா, அறிவியல், தொழில்நுட்பம், சுகாதாரம், பசுமை எரிசக்தி, சைபர் பாதுகாப்பு ஆகிய துறைகளிலும் இணைந்து செயல்படுகின்றன.

21ம் நூற்றாண்டு இந்தியா, ஆசியான் அமைப்பின் நூற்றாண்டு ஆகும். வரும் 2045ம் ஆண்டுக்கான ஆசியான் அமைப்பின் தொலைநோக்கு திட்டங்கள் நிச்சயமாக நிறைவேறும். இதேபோல வரும் 2047ம் ஆண்டில் வளர்ச்சி அடைந்த இந்தியாவும் உருவாகும். நாம் தோளோடு தோள் நின்று வெற்றிப் பயணத்தை தொடர்வோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

ஆசியான் உச்சி மாநாடு மற்றும் ஆசியான் இந்தியா உச்சி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி ஆண்டுதோறும் பங்கேற்பது வழக்கம். ஆனால் முதல்முறையாக அவர் மாநாட்டில் பங்கேற்கவில்லை.

கோலாலம்பூரில் நேற்று தொடங்கிய உச்சி மாநாட்டில் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் பங்கேற்றார். வரிவிதிப்பு விவகாரம் தொடர்பாக இந்தியா, அமெரிக்கா இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. இதில் சுமுக உடன்பாடு எட்டப்பட்ட பிறகு அதிபர் ட்ரம்பை பிரதமர் மோடி சந்திக்க முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. இதன்காரணமாகவே பிரதமர் மோடியின் மலேசிய பயணம் ரத்து செய்யப்பட்டது என்று டெல்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கடலாடியில் தேவர் குருபூஜையில் பெண்கள் முளைப்பாரி ஊர்வலம்

சாயல்குடி, அக்.28-

கடலாடியில் தேவர் குருபூஜை மற்றும் முளைப்பாரி திருவிழாவையொட்டி 10 நாள் திருவிழா நடந்தது. கடலாடி தேவர் மகாசபையின் சார்பில் ராஜராஜேஸ்வரி அம்மன் 8 ஆண்டு வருடாபிஷேகம் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் 118ம் ஆண்டு ஜெயந்தி, 63வது குருபூஜை மற்றும் 37ம் ஆண்டு முளைப்பாரி திருவிழா நடந்தது.

நிகழ்ச்சிகளுக்கு தேவர் மகாசபை தலைவர் ஜெகநாதன் தலைமையும், செயலாளர் சுபாஷ் சந்திரபோஸ், பொருளாளர் செல்லப்பாண்டியன் முன்னிலையும் வகித்தனர்.

கடந்த வாரம் சனிக்கிழமை காப்பு கட்டுதலுடன் திருவிழா தொடங்கியது. புதன்கிழமை கணபதி ஹோமம் மற்றும் யாகச்சாலைகள் வளர்க்கப்பட்டு ராஜேஸ்வரி அம்மன், விநாயகர், முருகன், தேவர் சிலைகளுக்கு புனித நீர் ஊற்றி,சிறப்பு அலங்காரத்துடன் தீபாராதனை நடந்தது.

திருவிழாவையொட்டி தினந்தோறும் இரவில் பெண்கள் கும்பி அடித்தும், இளைஞர்கள் ஒயிலாட்டம், சிறுமிகள் கோலாட்டம் ஆடியும் உற்சாகமாக கொண்டாடினர்.

மாவிளக்கு, பால்குடம், அக்னிச்சட்டி, ஆயிரம் கண் பானை, வேல் எடுத்தும், முடிகாணிக்கை நேர்த்திக்கடன் செலுத்தினர். மழை பெய்து விவசாயம் செழிக்க வேண்டி 1008 திருவிளக்கு பூஜை நடத்தப்பட்டது.

கடைசி நாளான நேற்று கட்டுரை போட்டி, பேச்சுப் போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ,மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. மாலையில் பெண்கள் முளைப் பாரியை எடுத்து கடலாடியின் முக்கிய வீதிகளில் ஊர்வலமாக வந்து குளத்தில் கரைத்தனர்.

நிகழ்ச்சியில் பொது மக்களுக்கு அன்ன தானம் வழங்கப் பட்டது. திருவிழாவில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை கடலாடி தேவர்மகாசபை மற்றும் இளைஞரணியினர் செய்திருந்தனர்.

## கடலூர் துறைமுகத்தில் வரத்து குறைவால் மீன்கள் விலை உயர்வு

கடலூர், அக்.28-

கடலூர் துறைமுகத்தில் நேற்று வரத்து குறைவு காரணமாக மீன்களின் விலை உயர்ந்து காணப்பட்டது. ஒரு கிலோ வஞ்சிரம் ரூ.1200க்கு விற்பனை செய்யப்பட்டது.

கடலூர் துறைமுகத்தில் இருந்து ஏராளமான மீனவர்கள் தினந்தோறும் விசை மற்றும் பைபர் படகுகளில் மீன் பிடிக்க சென்று வருகின்றனர். கடலூர் துறைமுகத்தில் அதிகாலை முதல் மீன் விற்பனை தொடங்கி விறுவிறுப்பாக நடைபெறும். இதனை உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகள் மட்டுமின்றி பொதுமக்களும் போட்டி போட்டு வாங்கி சென்று வருகின்றனர்.

இந்நிலையில், வங்க கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக கடலூர் துறைமுகத்தில் 1ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. இதற்கிடையே, கனமழை மற்றும் கடலில் சூறைக் காற்று வீசும் என்ற எச்சரிக்கை காரணமாக கடலூர் மாவட்டத்தில் கடந்த 19ம் தேதி முதல் விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமையான நேற்று கடலூர் மீன்பிடி துறைமுகத்தில் கரைப்பகுதியில் பிடித்து வரப்பட்ட மீன்கள் மட்டும் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. வரத்து குறைவு காரணமாக மீன்களின் விலை உயர்ந்தது.

ஒரு கிலோ வஞ்சிரம் ரூ.1200க்கும், சங்கரா ரூ.500க்கும், சுறா ரூ.500க்கும், சீலா ரூ.450க்கும், பாறை ரூ.350க்கும், இறால் ரூ.300 முதல் ரூ.400 வரைக்கும், வவ்வால் ரூ.750க்கும், நெத்திலி ரூ.200க்கும் விற்பனை செய்யப்பட்டது. மீன்கள் வாங்க பொதுமக்களின் கூட்டம் குறைவாக காணப்பட்டது.

## எவ்வளவு மழை பெய்தாலும் சமாளிக்க அரசு தயார்: துணை முதல்வர் உதயநிதி

சென்னை: அக்.28-

எந்த அளவுக்கு அதிக மழை பெய்தாலும் அதை சமாளிக்கும் வகையில் தமிழக அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

வட சென்னையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைக்கால முன்னெச்சரிக்கைப் பணிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு செய்தார். பின்னர், வியாசர்பாடி கால்வாய் தொடங்குமிடமான ஜீரோ பாயின்ட்டில் தூர்வாரும் பணிகளையும், கேப்டன் காட்டன் கால்வாயில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளையும் பார்வையிட்டார்.




மேலும், மழைப்பொழிவு கூடுதலாக இருந்தாலும் அதனை சமாளிக்கக் கூடிய வகையில் துரித நடவடிக்கைகளும், முன்னெச்சரிக்கைப் பணிகளும் இருக்க வேண்டும் என அதிகாரிகளை அறிவுறுத்தி உள்ளார்.

இந்நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய உதயநிதி ஸ்டாலின், "வட சென்னையை பொறுத்தவரை 18 கால்வாய்கள், 13 குளங்கள் சென்னை மாநகராட்சி மூலம் தூர்வாரப்பட்டுள்ளது. மொத்தம் 331 கிலோ மீட்டர் நீளத்துக்கு கால்வாய்கள் தூர்வாரப்பட்டுள்ளது. மூன்றரை லட்சம் டன் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளது. முதல்வர் அனைத்தையும் கண்காணித்து வருகிறார்.

சமூக வலைதளங்களில் பொதுமக்கள் வைக்கும், புகார், கோரிக்கைகளை முதல்வர் ஸ்டாலின் உடனடியாக கண்காணிக்க வேண்டும் எனச் சொல்லியிருக்கிறார். அடுத்த பத்து நாட்களுக்கு பெரிய அளவில் மழை இருக்காது என வானிலை ஆய்வு மையம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், எந்த அளவுக்கு அதிக மழை பெய்தாலும் அதை சமாளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## சூரசம்ஹாரத்தை முன்னிட்டு பழநி முருகன் கோயிலில் 'தண்டு விரதம்' இருந்து பக்தர்கள் வழிபாடு

பழநி, அக்.28-

பழநி முருகன் கோயிலில் கந்தசஷ்டி திருவிழாவின் முக்கிய நிகழ்வாக திங்கட்கிழமை (அக்.27) மாலை சூரசம்ஹாரம் நடைபெற உள்ளது. இதையொட்டி, ஏராளமான பக்தர்கள் 'தண்டு விரதம்' இருந்து வழிபாடு நடத்தினர்.

அறுபடை வீடுகளில் 3ம் படை வீடான பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் கந்தசஷ்டி திருவிழா அக்.22ம் தேதி காப்பு கட்டுதலுடன் தொடங்கியது. மலைக் கோயிலில் மூலவர், உற்சவருக்கு காப்பு கட்டப்பட்டதை தொடர்ந்து விநாயகர், துவாரபாலகர்கள், நவவீரர்களுக்கு காப்பு கட்டப்பட்டது. கந்தசஷ்டி விழாவை முன்னிட்டு தினமும் காலை, மாலையில் சுவாமி புறப்பாடு நடைபெற்றது.



விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் திங்கட்கிழமை (அக்.27) மாலை கிரிவீதிகளில் நடைபெற உள்ளது. இதையொட்டி, இன்று (அக்.27) அதிகாலை 4 மணிக்கு நடை திறக்கப்பட்டு விஸ்வரூப தரிசனம், காலை 4.30 மணிக்கு விளா பூஜை மற்றும் படையல் நைவேத்தியம் நடைபெற்றது. சூரசம்ஹாரத்தை யொட்டி, காலை 11 மணி வரை மட்டுமே மலைக்கோயிலுக்கு அனுமதிக்கப்பட்டனர். கந்த சஷ்டியை முன்னிட்டு விரதமிருந்த பக்தர்கள் இன்று காலை முதலே திருஆவினன்குடி கோயிலில் 'தண்டு விரதம்' இருந்து வழிபாடு செய்தனர்.

அதாவது, வாழைத் தண்டு, இஞ்சி, ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை உள்ளிட்ட பழ வகைகள், தயிர் ஆகியவற்றை கொண்டு பிரசாதம் தயார் செய்து சுவாமிக்கு படைத்து விரதத்தை நிறைவு செய்தனர். சூரசம்ஹாரத்தை முன்னிட்டு, வெளி மாவட்டங்களில் இருந்து பக்தர்கள் வந்த வண்ணம் உள்ளனர்.

பழநி மலைக்கோயிலில் மாலை 3 மணிக்கு மலைக்கொழுந்து அம்மனிடம் சூரனை வதம் செய்ய சின்னக்குமார சுவாமி வேல் வாங்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இதையடுத்து, அனைத்து சந்நிதிகளும் அடைக்கப்படும்.

பராசக்தி வேலை திருஆவினன்குடி முருகன் கோயிலுக்கு சென்று பூஜை செய்த பின், மாலை 6 மணிக்கு மேல் வடக்கு கிரிவீதியில் தாரகாசூரன், கிழக்கு கிரிவீதியில் பானுகோபன் சூரன், தெற்கு கிரிவீதியில் சிங்கமுகாசூரன், மேற்கு கிரிவீதியில் சூரபத்மன் ஆகியோரை சின்னக்குமார சுவாமி வதம் செய்ய உள்ளார்.

சூரசம்ஹாரம் முடிந்ததும் இரவு 9 மணிக்கு மேல் ஆரியர் மண்டபத்தில் வெற்றி விழாவும், மலைக்கோயிலுக்கு சென்ற பின் சம்ப்ரோட்சனம் மற்றும் அர்த்தஜாம பூஜையும் நடைபெற்றது. நாளை (அக்.28) காலை 10 மணிக்கு மேல் மலைக்கோயிலில் வள்ளி, தேவசேனா சமேத சண்முகருக்கும், பெரியநாயகியம்மன் கோயிலில் இரவு 7 மணிக்கு மேல் வள்ளி, தேவசேனா முத்துக்குமாரசுவாமிக்கும் திருக்கல்யாணம் நடைபெற உள்ளது.

## தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் நெல்லின் ஈரப்பதத்தை ஆய்வு செய்த மத்தியக் குழுவினர்

தஞ்சாவூர் / திருச்சி/ புதுக்கோட்டை, அக்.28-

தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் நெல்லின் ஈரப்பத்தை மத்தியக் குழுவினர் நேற்று ஆய்வு செய்தனர். தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழையால் நெல் மூட்டைகள் நனைந்துள்ளன. எனவே, 22 சதவீதம் வரை ஈரப்பதமுள்ள நெல்லை கொள்முதல் செய்ய மத்திய அரசிடம், தமிழக அரசு அனுமதி கேட்டது.

இதையடுத்து, ஈரப்பதம் தொடர்பாக ஆய்வு செய்ய மத்திய அரசு 3 குழுக்களை அமைத்தது. இக்குழுவைச் சேர்ந்த பி.கே.சிங், ஷோபித் சிவாச், ராகேஷ் பரலா ஆகியோர் தஞ்சாவூர் அருகே ஆலக்குடியில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நேற்று நெல்லின் ஈரப்பதம் தொடர்பாக ஆய்வு செய்தனர்.



ஆய்வுக் குழுவினரிடம் விவசாயிகள், "ஒவ்வோர் ஆண்டும் மத்தியக் குழு தமிழகத்தில் ஆய்வு செய்தாலும், மத்திய அரசிடமிருந்து எந்த அறிவிப்பும் வருவதில்லை. எனவே, ஈரப்பதம் தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரத்தை மாநில அரசிடமே மத்திய அரசு வழங்க வேண்டும். மேலும், தற்போது மத்தியக் குழுவினர் மேற்கொண்டுள்ள ஆய்வு தொடர்பான அறிக்கையை உடனடியாக மத்திய அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும்" என்றனர்.

ஆய்வின் போது, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண் இயக்குநர் ஆ.அண்ணாதுரை, தஞ்சாவூர் ஆட்சியர் பா.பிரியங்கா பங்கஜம் உள்ளிட்டோர் உடனிருந்தனர். தொடர்ந்து, மத்தியக் குழுவினர் ராராமுத்திரை கோட்டை, தெலுங்கன் குடிக்காடு, கீழ கோவில் பத்து உள்ளிட்ட இடங்களில் ஆய்வு செய்தனர்.

திருச்சி மாவட்டம் லால்குடி வட்டம் வாளாடி வேலாயுதபுரம் திறந்தவெளி நெல் கொள்முதல் நிலையத்தில் மத்தியக் குழுவைச் சேர்ந்த ராஜ்கிஷோர் சாஹி, ராகுல் சர்மா, தனிஜ் சர்மா ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது, மத்தியக் குழுவினர் காலணிகளுடன் நெல் குவியல் மீது ஏறி நின்று ஆய்வு செய்ததால் விவசாயிகள் அதிருப்தியடைந்தனர். மேலும், காய்ந்த நெல்மணிகளை பரிசோதனைக்கு சேகரித்ததாக மத்தியக் குழுவினர் மீது விவசாயிகள் குற்றம்சாட்டினர். தொடர்ந்து, பூவாளூர், கோமாகுடி, கொப்பாவளி நெல் கொள்முதல் நிலையங்களிலும் மத்தியக் குழுவினர் ஆய்வு செய்தனர்.

இதே குழுவினர், புதுக்கோட்டை மாவட்டம் கல்லாக்கோட்டை, பந்துவாக்கோட்டையில் உள்ள கொள்முதல் நிலையங்களுக்குச் சென்று, நெல் மணிகளின் ஈரப்பதத்தை ஆய்வு செய்தனர். குழுவினர் உரிய நேரத்துக்கு வராமல், இரவில் வந்து ஆய்வு செய்ததும், காலணியைக் கழற்றாமல் நெல் குவியலில் ஏறியதும் விவசாயிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது. ஆய்வின்போது, எம்எல்ஏ எம்.சின்னதுரை, ஆட்சியர் எம்.அருணா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.




## தாராபுரத்தில் உலக சாதனை நிகழ்ச்சி: தி கிங்டம் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ் அங்கீகரித்த தாராபுரம் மாணவர்களின் சாதனை

தாராபுரம், அக்.28-

டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் 94வது பிறந்தநாளை முன்னிட்டு, தாராபுரத்தில் 333 மாணவர்கள் இணைந்து 94 நிமிடங்கள் 94 விநாடிகள் தொடர்ந்து நிகழ்த்திய சிறப்பு நிகழ்வு உலக சாதனையாகப் பதிவு செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் தாராபுரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள 7 முதல் 8 பள்ளிகளின் மாணவர்கள் உற்சாகமாகப் பங்கேற்றனர். இச்சாதனையை தி கிங்டம் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ் நிறுவனம் உலக சாதனையாக அங்கீகரித்து, சாதனை படைத்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கியது.

இந்நிகழ்வை ஸ்மாஷிங் பீட் நடன பள்ளி இயக்குனர் காவிய இளவரசர் ஒருங்கிணைத்து சிறப்பாக நடத்தியுள்ளார்.

இந்த நிகழ்வு, டாக்டர் அப்துல் கலாம் நினைவாக இளைய தலைமுறைக்கு ஊக்கமளிக்கும் விதமாக நடைபெற்றது.



## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தலைமையில் நடைபெற்றது

சிவகங்கை, அக்.28-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தலைமையில் நடைபெற்றது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, மூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித்தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித்தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொதுமக்களிடமிருந்து 127 மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.விஜயகுமார் அவர்கள், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.அனிஷ் சத்தார் உட்பட பல்வேறு துறைகளை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



## ஊழல் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு உறுதி மொழி அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்பு

மதுரை, அக்.28-

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் ஊழல் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு உறுதிமொழி மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.தி.நாகராஜன் அவர்கள் தலைமையில் அனைத்து பணியாளர்களும் ஏற்றுக் கொண்டனர்.

உறுதிமொழி

நமது நாட்டின் பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு ஊழல் ஒரு முக்கிய தடையாக உள்ளதாக நான் நம்புகிறேன். அரசு, குடிமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவை ஊழலை ஒழிப்பதற்கு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என நான் நம்புகிறேன். நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் எப்போதும் உயர்ந்த நோக்குடன் விழிப்புணர்வு, நேர்மை மற்றும் கண்ணியம் ஆகியவற்றுடன் ஊழலை ஒழிப்பதில் உறுதுணையாக விளங்க வேண்டும் என்பதை நான் நன்கறிவேன். எனவே நான், அனைத்து செயல்களிலும் நேர்மையையும், சட்ட விதிகளையும் பின்பற்றுவேன் என்றும், இலஞ்சம் வாங்கவோ அல்லது கொடுக்கவோ மாட்டேன் என்றும், அனைத்து செயல்களையும் நேர்மை மற்றும் வெளிப்படைத் தன்மையுடனும், செயல்படுத்துவேன் என்றும், பொதுமக்களின் நலனுக்காக பணியாற்றுவோம் என்றும், தனிப்பட்ட நடத்தையில் நேர்மையை வெளிப்படுத்துவதில் ஒரு முன்னுதாரணமாக செயல்படுவேன் என்றும், ஊழல் தொடர்பான தகவல்களை உரிய அதிகார அமைப்பிற்கு தெரியப்படுத்துவேன் என்றும் உறுதி கூறுகிறேன் என அனைத்து அலுவலர்கள், பணியாளர்கள் ஏற்றுக் கொண்டனர். இதே போல் அந்தந்த மண்டலங்களில் உதவி ஆணையாளர்கள் அவர்கள் முன்னிலையில் ஊழல் தடுப்பு உறுதி மொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் துணை ஆணையாளர் திரு.ஜெய்னுலாப்தீன், உதவி ஆணையாளர் (பணி) திருமதி.அருணாச்சலம், செயற்பொறியாளர் (திட்டம்) திருமதி.மாலதி, மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன், உதவி ஆணையாளர் (கணக்கு) திரு.வெங்கடராமன், கல்வி அலுவலர் திரு.ஜெய்சங்கர், கணக்கு அலுவலர் (பொது) திரு.பாலாஜி, கண்காணிப்பாளர் திரு.ராஜ்குமார், மாநகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வி.ஐ.டி துணைத் தலைவர் ஜி.வி.செல்வம் பிறந்தநாளை முன்னிட்டு ஊர்க்காவல் படையினருக்கான மருத்துவ முகாம் மற்றும் நலதிட்ட விழா

### உடற்பயிற்சிக்கு ஈடாக மனபயிற்சி நமக்குத் தேவை வி.ஐ.டி துணைத் தலைவர் ஜி.வி.செல்வம் பேச்சு

வேலூர், அக்.28-

வேலூர் சரக டி.ஐ.ஜி. தர்மராஜன் பங்கேற்று சிறப்புரையாற்றி நல திட்டங்களை வழங்கினார்

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் கோட்டை சுற்றுச் சாலை, காவலர் திருமண மண்டபத்தில் வேலூர் மாவட்ட ஊர்க்காவல் படையினருக்கு சிறப்பு மருத்துவ முகாம், வேலூரில் தலைமுறை பேரவை மற்றும் ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி மருத்துவமனை ஆகியவை இணைந்து வி.ஐ.டி துணைத்தலைவர் ஜி. வி.செல்வம் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு வேலூர் மாவட்ட ஊர்க்காவல் படையினருக்கான மருத்துவ முகாம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் முகாம் வேலூர் சரக போலீஸ் டி.ஐ.ஜி ஜி.தர்மராஜன் தலைமையில் நடைபெற்றது.



வேலூர் சரக போலீஸ் டிஐஜி ஜி.தர்மராஜன் பேசியதாவது: வி.ஐ.டி துணைத் தலைவர் ஜி.வி. செல்வம் சேவை மனப்பான்மையுடன் செயல்பட்டு வருவது பாராட்டத்தக்கது. நான் டி.ஐ.ஜி என்ற பதவியை அதிகாரமாக பார்க்கவில்லை. மக்களுக்கு சேவை செய்ய கிடைத்த வாய்ப்பாகத்தான் பார்க்கிறேன். நாம் யாரும் உடல்நலனில் அக்கறை கொள்வதில்லை. நம்முடைய வாழ்க்கை முறை திட்டமில்லாமல் இருப்பதால் நோய்கள் அதிகம் வருகிறது. திடீர், திடீரென இறப்புகள் ஏற்படுகின்றன. சிலர் உடலை கட்டுக்கோப்பாக வைத்திருக்க அதிகமாக செலவழிக்கிறார்கள். அவ்வாறு செலவு செய்ய தேவையில்லை. ஒரு சிறிய அறையில் கூட உடற்பயிற்சி செய்யலாம். உங்களுடைய உடற்பயிற்சி காலை, இரவு என எந்த நேரத்திலும் செய்யலாம். குறிப்பாக பெண்களுக்கு வேலை பளு அதிகம். இருந்தாலும் அவர்களும் தினமும் 40 நிமிடம் ஒதுக்கி உடற்பயிற்சி செய்ய வேண்டும். நாம் உடலை பேணி காக்க வேண்டும். மூன்று மாதத்திற்கு ஒரு மறை ஊர்க்காவல் படையினருக்கு பயிற்சி தேவை. நீங்கள் எந்த மட்டத்தில் இருந்தாலும் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும். உங்களால் முடிந்த உதவியை மற்றவர்களுக்கு செய்ய வேண்டும் என பேசினார்

ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி மருத்துவமனை கண்காணிப்பாளர் கீதா இனியன் முன்னிலை சிறப்புரையாற்றினார்.

உணவு முறையின் உன்னதம் குறித்து அரசு சித்த மருத்துவர் தில்லைவாணன் பேசினார். சிறப்பு விருந்தினராக வி.ஐ.டி துணைத் தலைவர் ஜி.வி. செல்வம் கலந்து கொண்டு மருத்துவ முகாமை தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது;

என்னுடைய பிறந்தநாளை சேவை நாளாக மாற்றிய தலைமுறை பேரவையினருக்கு நன்றி. ஊர்க்காவல் படையினர் எல்லை தெய்வமாக உள்ளனர். போலீசார் பாதுகாப்பு பணிக்காக வெளியூர்களுக்கு செல்லும்போது நம்மை காப்பது ஊர்க்காவல் படையினர் தான். ஊர்க்காவல் படையினர் அனைவருக்கும் இன்சூரன்ஸ் இலவசமாக வழங்கப்படும். உடற்பயிற்சிக்கு ஈடாக மணப்பயிற்சியும் நமக்குத் தேவை. எந்தப் பிரச்சனை வந்தாலும் அதனை நாம் எதிர்கொள்ள வேண்டும். பிரச்சினையைப் பற்றி கவலை படக் கூடாது. நம்மால் முடியும் என நினைத்தால் முடியும். கடவுள் நமக்கு கொடுத்திருப்பது பணம், அன்பு, அறிவு. அதனை மற்றவர்களுக்கு வழங்கி மகிழ வேண்டும். ஒரு நாளைக்கு தொழிலதிபர் ஷிவ்நாடார் ரூ. 6 கோடியை நன்கொடையாக வழங்குகிறார். நாம் மற்றவர்களுக்கு உதவி செய்வதை ஒரு கடமையாக கொள்ள வேண்டும் என்றார். இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக ஊர்காவல்படை உதவி கமாண்டன்ட் ஜெனரல் சுரேஷ், ஏரியா கமாண்டர் குமரன், துணை ஏரியா கமாண்டர் அர்ச்சனா சித்தார்த் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். பல்வேறு பிரிவுகளில் சிறந்த சமூக சேவை பணி செய்பவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. விழாவில் கணேஷ் வினோத் உள்பட பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை தலைமுறை பேரவை நிர்வாகிகள் எம்.சீனிவாசன், பா.பூமிநாதன், வழக்கறிஞர் பி.டி.கே.மாறன், வி.சீனிவாசன், கே.சதீஷ்குமார், கே.எஸ்.சுந்தர் ஆகியோர் செய்திருந்தனர்.

## திருப்பூர் மாவட்டத்தில் 28.10.2025 இன்று நடைபெற இருந்த விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நிர்வாக காரணங்களுக்காக ஒத்தி வைக்கப்படுகிறது

திருப்பூர், அக்.28-

திருப்பூர் மாவட்டத்தில் 28.10.2025 இன்று நடைபெற இருந்த விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நிர்வாக காரணங்களுக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தகவல். திருப்பூர் மாவட்டத்தில் 28.10.2025 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற இருந்த விவசாயிகள் குறை தீர்ப்பு நாள் கூட்டம் நிர்வாக காரணங்களுக்காக ஒத்தி வைக்கப்படுகிறது என மாவட்ட ஆட்சியர் டாக்டர். மனிஷ் நாரணவரே தெரிவித்துள்ளார்..



## மூணாறில் புல் மேட்டில் முகாமிட்ட யானைக் கூட்டம்: கண்டு ரசித்த சுற்றுலா பயணிகள்

மூணாறு, அக்.28-

தீவனத்துக்காக காட்டை விட்டு வெளியேறிய யானைக் கூட்டம் மூணாறு அருகே உள்ள புல்மேட்டில் முகாமிட்டுள்ளன. சாலைக்கு மிக அருகில் இருந்த காட்டு யானைகளை சுற்றுலாப் பயணிகள் கண்டு ரசித்தனர்.

மூணாறு அருகே மாட்டுப்பட்டி அணையின் கரையில் புல் மேடுகள் அதிகம் உள்ளன. இங்கிருக்கும் புற்களை உண்பதற்காக காட்டில் இருந்து வரும் யானைகள் அடிக்கடி இங்கு முகாமிடுவது வழக்கம். மாட்டுப்பட்டி, எக்கோ பாயின்ட் ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் சாலையில் இந்த புல் மேடுகள் அமைந்துள்ளன. இதனால் யானைகள் அங்கு வரும் போது சுற்றுலாப் பயணிகள் பலரும் இங்கு வாகனங்களை நிறுத்தி, அவற்றை ரசிப்பது வழக்கம்.

இந்நிலையில் இப்பகுதியில் 4 யானைகள் முகாமிட்டுள்ளன. பிற்பகலில் வந்த இந்த யானைகள் சுமார் ஒரு மணி நேரம் வரை அங்கிருந்த புற்களை உண்டு கொண்டிருந்தன. இதனை சுற்றுலாப் பயணிகள் பலரும் பார்த்தும், வீடியோ, புகைப்படங்களாக எடுத்தும் பதிவு செய்தனர். பின்னர், யானைகள் அணைக்கு அருகே உள்ள காட்டுப் பகுதிக்கு திரும்பிச் சென்றுள்ளன.



■ சிவகங்கை மாவட்டம், தி.புதூர் மஞ்சுவிரட்டு மைதானம் அருகில் சிவகங்கை லயன்ஸ் சங்கம், First Garment's அம்மையப்பர் குழுமம் மற்றும் இந்தோ திபெத்திய எல்லைக் காவல் படை (பயிற்சி மையம்) ஆகியவைகளின் சார்பில் 10,000 பனை விதைகள் நடும் விழாவினை, மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தொடங்கி வைத்தார்.



■ மதுரை மாநகராட்சி மண்டலம் 2 அருள்தாஸ்புரம், ரௌதம்மாா் தெரு மற்றும் முனியாண்டி கோவில் 2வது தெரு உள்ளிட்ட வார்டு எண்.22க்கு உட்பட்ட பகுதிகளில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் மேம்பாட்டு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார் அருகில் ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



## இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள

### மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள கிடங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு

இராமநாதபுரம், அக்.28-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள கிடங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இந்திய தேர்தல் ஆணையத்தின் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரக்கிடங்கு வளாகத்தில் உள்ள இராமநாதபுரம், முதுகுளத்தூர், திருவாடனை, பரமக்குடி (தனி) ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள அறையினை அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்களுடன் பாதுகாப்பு தன்மை குறித்து பார்வையிட்டார். முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வேளாண்மை வணிக ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.செ. ஹபிபூர் ரஹ்மான் அவர்கள், வட்டாட்சியர்கள் திரு.காளீஸ்வரன் அவர்கள், திரு.ஸ்ரீதரன் அவர்கள் (தேர்தல்), மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது

கடலூர், அக்.28-

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தலைமையில் இன்று (27.10.2025) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தெரிவிக்கையில், தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, பொதுமக்களின் குறைகளை களைவதற்காகவும், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று உரிய விசாரணை மேற்கொண்டு, தகுதியான பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காகவும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் திங்கள்கிழமைதோறும் நடைபெற்று வருகிறது.

இன்றைய கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து 553 மனுக்கள் பெறப்பட்டன. பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி தகுதியான மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ம.இராஜசேகரன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் ராணி, தனித்துணை ஆட்சியர் (முத்திரைத்தாள்) தனலட்சுமி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) தங்கமணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.




## மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 252 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது

தேனி, அக்.28-

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 252 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ் ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 252 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் தலா ரூ.1,14,400/ மதிப்பிலான பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலிகளை 5 மாற்றுத்திறனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ஐ.மகாலட்சுமி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி அபிதா ஹனீப், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) திரு.சண்முகசுந்தரம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திரு.முத்துமாதவன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி காமாட்சி உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## உலகத் தமிழர்களின் வர்த்தகப் பெருவிழா சர்வதேசத் தமிழர்கள் வர்த்தக மாநாடு

கோவை, அக்.28-

கோவை மாவட்ட சிறுதானிய உற்பத்தியாளர்களுக்கு அழைப்பு உலகிலேயே முதல் முறையாக, தமிழ்நாட்டின் தொழில்முனைவோர்களுக்கும் தமிழ்நாட்டின் பாரம்பரிய பிரத்யேக தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கும் உலகளாவிய சந்தையை உருவாக்கும் நோக்குடன். “இன்டர்நேஷனல் தமிழர் பிசினஸ் கான்கிளேவ் 2025’ எனும் சர்வதேசத் தமிழர்கள் வர்த்தக மாநாடு மலேசியாவில் பிரம்மாண்டாக நடைபெற உள்ளது.

2025 டிசம்பர் 22 முதல் 25 ஆம் தேதி வரை நான்கு நாட்கள் மலேசியாவில் உள்ள ஹோட்டல் விந்தாம் கார்டன் ஐசிட்டி - மிட்லேண்ட்ஸ் கண்வென்ஷன் சென்டர்





ஷா ஆலம் என்ற இடத்தில் நடைபெற உள்ளது. இதற்கான செய்தியாளர் சந்திப்பு கோவை பத்திரிகையாளர் மன்றத்தில் நடைபெற்றது.

23 ஆம் தேதி மலோசியாவில் உள்ள தமிழர் வர்த்தக சங்கம் 4வது ஆண்டு விழாவும் நடைபெறுகிறது. விழாவில் சுமார் 1000ற்கும் மேற்பட்ட மலோசி வர்த்தகர்கள் பொதுமக்கள் பங்கேற்க உள்ளார்கள். விழாவில் தமிழ்நாட்டின் பாரம்பரிய சிறுதானிய உணவுகள் மதிய உணவாக பரிமாறப்படும்.

மாநாட்டின் முக்கிய நோக்கங்கள், தமிழ்நாட்டின் பாரம்பரிய உணவுப் பொருட்கள் மீட்டுருவாக்கம் செய்தல், தமிழ்நாடு தொழில்முனைவோர்களை சாவதேச தமிழ் வர்த்தகர்களுடன் இணைத்தல், தமிழ்நாட்டு பாரம்பரிய தொழில்களை சர்வதேச தமிழ் வர்த்தகர்கள் அவர்களது நாட்டில் மேற்கொள்வதற்கான ஒரு வாய்ப்பாக இந்த மாநாடு அமைகிறது. தமிழ்நாட்டின் பாரம்பரிய பிரத்யேக தயாரிப்புகள் மற்றும் சேவைகளை உலகமெங்கும் பிரபலப் படுத்துதல், தமிழ்நாட்டு பாரம்பரிய சிறு குறு தொழில்களை ஊக்குவிக்கும் சர்வதேசக் கூட்டு முயற்சியாக இந்த மாநாடு நடைபெற உள்ளது.

இதில் உலகெங்கிலிருந்தும் வரும் தமிழ் வர்த்தகர்கள் தொழில் முனைவோரிடம் தங்களது உற்பத்தி பொருட்களை நேரடியாக காட்டி வர்த்தக தொடர்புகளை மேற்கொள்ள ஒரு அற்புதமான வாய்ப்பாக அமைந்துள்ளது என்று பத்திரிக்கையாளர் சந்திப்பில் மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்கள் எஸ்.சுந்தர், நிறுவனர், மில்லட் பவுண்டேஷன் மற்றும் பாலகிருஷ்ணன் பத்துமலை தலைவர், தமிழர் வர்த்தக சங்கம் மலேசியா தெரிவித்துள்ளார்.



## மதுரை: சாலையில் கிடந்த ரூ.17 லட்சம் பணத்தை போலீஸில் ஒப்படைத்த பெண்; குவியும் பாராட்டு

சென்னை, அக்.28-

மதுரையில் சாலையில் சாக்கு மூட்டையில் கிடந்த ரூ.17 லட்சம் பணத்தை காவல் நிலையத்தில் ஒப்படைத்த பெண்ணுக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

மதுரை மாநகர் சிம்மக்கல் பகுதியைச் சேர்ந்தவர் சிவ பக்தரான செல்வமாலினி. இவர் தனது மகளுடன் மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு நேற்று முன்தினம் சென்றுள்ளார். கோயிலில் இருந்து செல்வமாலினி வீட்டுக்கு புறப்பட்டுச் சென்றபோது, மதுரை வக்கீல் புதுத்தெரு சந்திப்பு பகுதியில் சாலையின் நடுவே சாக்குமூட்டை ஒன்று கிடந்துள்ளது.

இதனை ஓரமாக தள்ளி விடுவதற்காக தனது காலால் எட்டி உதைத்த போது சாக்குமூட்டையில் ரூ.500 பணக்கட்டு இருப்பது போல தெரிந்தது. இதைப் பார்த்து பதற்றமடைந்த செல்வமாலினி அருகில் பாதுகாப்புப் பணியில் இருந்த காவலரை அழைத்து விஷயத்தைக் கூறியுள்ளார்.

பின்னர் சாக்குமூட்டையை பிரித்துபார்த்தபோது 500 ரூபாய் கட்டுகள் ரூ.17 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் இருந்துள்ளது. பின்னர் செல்வமாலினி அந்த சாக்கு மூட்டையை விளக்குத்தூண் காவல் நிலையத்திற்கு எடுத்துச்சென்று ஒப்படைத்துள்ளார்.

அப்போது செல்வராணியின் நேர்மையைப் பார்த்து காவல்துறையினர் அப்பெண்ணுக்கு பாராட்டுகளை தெரிவித்தனர். இதையடுத்து சாக்கு மூட்டையில் கிடந்த பணம் யாருடையது என்பது குறித்தான விசாரணையில் ஈடுபட்டுவருகின்றனர்.


சாக்கு மூட்டையில் கிடந்த பணம் ஹாவாலா பணமா? வேறு யாரும் வியாபாரிகள் கொண்டுவந்த பணமா என விளக்குத்தூண் காவல்துறையினர் பகுதியில் உள்ள சிசிடிவி பதிவுகளை சேகரித்து பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர். இதற்கிடையில் ஒருவர் தனது பணம் என சொந்தம் கொண்டாடி காவல் நிலையத்துக்கு வந்துள்ளார். அவரிடம் ரூ17 லட்சத்திற்கான ஆவணங்களை கேட்டு போலீஸார் கேட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழியினை அனைத்துத் துறை அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர்

கடலூர், அக்.28-

கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழியினை இன்று (27.10.2025) அனைத்துத்துறை அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர்.

நேர்மை, வெளிப்படைத் தன்மை, ஊழலற்ற சமுதாயத்தினை உருவாக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் கடைசி வாரத்தில் லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு வாரமாக கடைபிடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்த ஆண்டு 27.10.2025 முதல் 02.11.2025 வரை கடைபிடிக்கப்படுகிறது.





“நமது நாட்டின் பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு ஊழல் ஒரு முக்கிய தடையாக உள்ளதாக நான் நம்புகிறேன். அரசு, குடிமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவை ஊழலை ஒழிப்பதற்கு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என நான் நம்புகிறேன். நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் எப்போதும் உயர்ந்த நோக்குடன் விழிப்புணர்வு, நேர்மை மற்றும் கண்ணியம் ஆகியவற்றுடன் ஊழலை ஒழிப்பதில் உறுதுணையாக விளங்க வேண்டும் என்பதை நான் நன்கறிவேன்.

எனவே, நான் அனைத்து செயல்களிலும் நேர்மையாகவும், சட்ட விதிகளையும் பின்பற்றுவேன் என்றும், இலஞ்சம் வாங்கவோ அல்லது கொடுக்கவோ மாட்டேன் என்றும், அனைத்து செயல்களையும் நேர்மை மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுத்துவேன் என்றும், பொதுமக்களின் நலனுக்காக பணியாற்றுவேன் என்றும், தனிப்பட்ட நடத்தையில் நேர்மையை வெளிப்படுத்துவதில் ஒரு முன்னுதாரணமாக செயல்படுவேன் என்றும், ஊழல் தொடர்பான நிகழ்வினை உரிய அதிகார அமைப்பிற்குத் தெரியப்படுத்துவேன்“ என்ற உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ரவி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) தீபா மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஆந்திராவில் ‘மோந்தா’ புயல் எப்போது கரையை கடக்கும்? வட தமிழக பகுதிகளில் கனமழை, தரைக்காற்று எச்சரிக்கை


சென்னை, அக்.28-

தீவிரப் புயலாக வலுப்பெறும் ‘மோந்தா’ புயல், ஆந்திர கடலோரப் பகுதிகளில், மசூலிப்பட்டினம் கலிங்கப்பட்டினத்துக்கு இடையே காக்கிநாடாவுக்கு அருகில் நாளை (அக்.28) மாலை அல்லது இரவு நேரத்தில் கரையை கடக்கக் கூடும். அப்போது, காற்றின் வேகம் மணிக்கு 90 முதல் 100 கிலோ மீட்டர் வேகத்திலும், இடையிடையே 110 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாளை (அக்.28) திருவள்ளூர் மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, தேனி, தென்காசி, திருநெல்வேலி மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது என்றும், வட தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 30 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: நேற்று (அக்.26 காலை தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து, நேற்று இரவு 11.30 மணி அளவில் ‘மோந்தா’ புயலாக வலுப்பெற்று, தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவியது.

இது, மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து, இன்று (அக்.27) காலை 8.30 மணி அளவில், தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில்,



சென்னையிலிருந்து கிழக்கு தென்கிழக்கே சுமார் 520 கிலோ மீட்டர் தொலைவிலும், காக்கிநாடாவிலிருந்து தெற்கு தென்கிழக்கே 570 கிலோ மீட்டர் தொலைவிலும், விசாகபட்டினத்திலிருந்து தெற்கு தென்கிழக்கே 600 கிலோ மீட்டர் தொலைவிலும் நிலைகொண்டுள்ளது.

இது, வடக்கு வடமேற்கு திசையில் நகர்ந்து, நாளை (அக்.28) காலை தீவிரப் புயலாக வலுப்பெற்று, மேலும், வடக்கு வடமேற்கு திசையில் நகர்ந்து, ஆந்திர கடலோரப்பகுதிகளில், மசூலிப்பட்டினம் கலிங்கப்பட்டினத்துக்கு இடையே காக்கிநாடாவுக்கு அருகில் தீவிரப் புயலாக நாளை (அக்.28) மாலை அல்லது இரவு நேரத்தில் கரையை கடக்கக் கூடும். அச்சமயத்தில் காற்றின் வேகம் மணிக்கு 90 முதல் 100 கிலோ மீட்டர் வேகத்திலும், இடையிடையே 110 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

நேற்று (அக்.26) மத்திய கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், வடக்கு வடகிழக்கு திசையில் நகர்ந்து, இன்று (அக்,27) காலை 8.30 மணி அளவில் அதே பகுதிகளில் நிலவுகிறது. இது, அடுத்த 48 மணி நேரத்தில் மேலும், வடக்கு வடகிழக்கு திசையில் நகர்ந்து, மத்திய கிழக்கு அரபிக்கடல் பகுதிகளை கடந்து நகரக்கூடும்.

அக்.27: தமிழகத்தில் இன்று (அக்.27) ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். வடதமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 30 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுவையிலும் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

அக்.28: தமிழகத்தில் நாளை (அக்.28) ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். வடதமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 30 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

திருவள்ளூர் மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, தேனி, தென்காசி, திருநெல்வேலி மாவட்டத்தின் மலைப் பகுதிகள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

அக்.29 முதல் நவ.2 வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பு: இன்று (அக்.27) வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய கன முதல் மிக கன மழை பெய்ய வாய்ப்புள்ளது. நாளை (அக்.28) வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான முதல் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது.

மீனவர்களுக்கான எச்சரிக்கை: தமிழக கடலோரப் பகுதிகள்: அக்.27 மற்றும் அக்.28. தமிழகம், புதுவை கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். அக்.29ல் வடதமிழகம் மற்றும் புதுவை கடலோரப்பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

எனவே, இந்த நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள். ஆழ் கடலிலுள்ள மீனவர்கள் உடனடியாக கரைக்குத் திரும்புமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



## வேலூர் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஆட்சியர் தலைமையில் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழியேற்பு

வேலூர், அக்.28-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஆட்சியர் தலைமையில் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழியேற்பு, வேலூர் மாவட்டத்தில் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி தலைமையில் அனைத்து அரசு அலுவலர்களுடன் உறுதிமொழி எடுத்து கொண்டனர். இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி, மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு, தேசிய நெடுஞ்சாலை) கௌசல்யா, மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் எஸ்.ஆர்.என். மதுசெழியன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் ஜெயசித்ரா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமால், காவல் துணை கண்காணிப்பாளர் எஸ்.சங்கர் (ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு) அனைத்து அரசு மாவட்ட தலைமை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு உறுதிமொழியேற்றனர்.

## மாமன்னர் மருது சகோதரர்களின் 224வது குருபூஜை விழாவினை முன்னிட்டு கட்டுப்பாடுகளை பின்பற்ற உத்தரவு

மதுரை, அக்.28-

மதுரை மாவட்ட கண்காணிப்பாளர் மருது சகோதரர்கள் குரு பூஜையில் கலந்து கொள்ள வாகனத்தில் செல்லும் நபர்கள் தங்களது எல்கைக்கு உட்பட்ட காவல் நிலையங்களில் அதற்குரிய ஆவணங்களை காட்டி உரிய அனுமதி பெற்று செல்ல வேண்டும். விதிக்கப்பட்ட சில கட்டுப்பாடுகளை பின்பற்ற வேண்டும்.என்று காவல்துறை சார்பாக உத்தரவு பிறப்பித்தார்.

நேற்று சிவகங்கை மாவட்டத்தில் நடைபெறும் மாமன்னர் மருது சகோதரர்களின் குருபூஜை விழாவில் கலந்து கொள்ள செல்லும் வாகனங்களுக்கு மதுரை மாவட்டம் திருமங்கலம் நகர் காவல் ஆய்வாளர் ஜெயக்குமார் பல வாகனங்களுக்கு பதிவு எண்களுடன் கூடிய அனுமதி பாஸ் வழங்கினார்.







## வி.ஐ.டி துணைத் தலைவர் ஜி.வி.செல்வம் பிறந்தநாளை முன்னிட்டு, ஜி.வி.எஸ். குழு சார்பில் நலதிட்டம் வழங்கும் விழா

வேலூர், அக்.28-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காந்திநகர், வி ஐ டி ஜிவி செல்வம் இல்லத்தில் பிறந்த நாள் விழா, வி.ஐ.டி துணைத் தலைவர் ஜி.வி. செல்வம் பிறந்தநாளை முன்னிட்டு, ஜி.வி.எஸ். குழு சார்பில் நலதிட்டம் வழங்கும் விழா ஜி.வி.எஸ் குழுவினர் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் விஐடி துணைத் தலைவர் ஜி.வி. செல்வம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, 2 ஏழைப் பெண்களுக்கு தையல் இயந்திரங்களையும், ஆட்டோ டிரைவர்களுக்கு மரக்கன்றுகளையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஜி.வி.எஸ். குழுவினர் கணேஷ், வினோத், புண்ணியகோட்டி, ஹேமாவதி, வழக்கறிஞர் பி.டி.கே மாறன், எம். சீனிவாசன், பா. பூமிநாதன், வி.சீனிவாசன், கே. சதீஷ்குமார், கே.எஸ். சுந்தர் மற்றும் நிர்வாகிகள் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் ஊழல் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு உறுதிமொழி மதிப்பிற்குரிய துணை மேயர் தி.நாகராஜன் தலைமையில் அனைத்து பணியாளர்களும் ஏற்றுக் கொண்டனர் அருகில் துணை ஆணையாளர் ஜெய்னுலாப்தீன், உதவி ஆணையாளர் (பணி) அருணாச்சலம் , செயற்பொறியாளர் (திட்டம்) மாலதி, கல்வி அலுவலர் ஜெய்சங்கர் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## வேலூர் அடுத்த செம்பேடு ஊராட்சியில் செம்பேடு சதுப்பேரி சிறுக்காஞ்சி குப்பம் அப்துல்லாபுரம் ஆகிய ஊராட்சிகளுக்கான தமிழக அரசின் நலன் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம்: அணைக்கட்டு எம்,எல்,ஏ. நந்தகுமார் பங்கேற்பு

வேலூர், அக்.28-

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், அணைக்கட்டு தாலுகா, செம்பேடு ஊராட்சியில் தமிழக அரசின் நலம் காக்கும் மருத்துவ முகாம் மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர். பரணிதரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி. நந்தகுமார், சுகாதாரப் பணிகள் மாவட்ட இணை இயக்குனர் மாறன் பாபு ஆகியோர் கலந்து கொண்டு முகாமை பார்வையிட்டு மாற்றுதிறனாளிகள் துறை சார்பில் இரண்டு மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு ரூ.14,400 மதிப்பீட்டில் இரண்டு காதுகளுக்கு நவீன காதொலி கருவி வழங்கி, 38 மாற்றுத் திறனாளி பயனாளிகளுக்கு அடையாள அட்டைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி திட்ட குழு தலைவர் மு.பாபு, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பாபு, மாவட்டத் தாட்கோ அலுவலர் ரேகா,ஒன்றிய குழு தலைவர் அமுதா ஞானசேகரன், துணைத் தலைவர் மகேஸ்வரி காசி, மாவட்ட கவுன்சிலர் த.பாபு, அணைக்கட்டு வட்டாட்சியர் சுகுமாரன், டி பி எச் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர். கார்த்திகேயன், வேலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வின்சென்ட் ரமேஷ் பாபு, பூம்பாவை, கெங்கநல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் செந்தில் குமார், சத்தியமங்கலம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரும் வழக்கறிஞருமான கே.பிரபாகரன், கீழ்கிருஷ்ணாபுரம் ஊராட்சி மன்ற தலைவர் அஸ்லாம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கார்த்திகேயன், மகாலட்சுமி, ஊராட்சி மன்ற தலைவர்கள், செம்பேடு அன்பழகன், சதுப்பேரி சுஜாதா சதீஷ் பாபு, துணைத் தலைவர் ஜெயக்குமார், அப்துல்லாபுரம் சக்திவேல், தாரா தினேஷ்குமார், ஊராட்சி செயலர்கள் பாலமுருகன், பாஸ்கரன், அருண்குமார், அலாவுதீன், சிந்து மணி, வெங்கடேசன், உள்ளிட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மருத்துவர்கள், செவிலியர்கள் மருத்துவ துறை பணியாளர்கள் தூய்மை பணியாளர்கள் பொதுமக்கள் மாற்றுத்திறனாளிகள் என சுமார் 1600 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சை பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.





மேலும், இம்முகாமில் பிள்ளையார் குப்பம் வேலூர் நர்சிங் கல்லூரியின் பேராசிரியர் சௌபி சோபியா தலைமையில் 75 க்கு மேற்பட்டோர் செவிலியர்கள் லேப் உதவியாளர்கள், நர்சிங் மாணவ மாணவியர்கள் தன்னார்வமாக கலந்து கொண்டு பொதுமக்களுக்கு பல்வேறு மருத்துவ உதவிகள் செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த முகாமில் 38 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளி சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்த நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட சிறப்பு மருத்துவ முகாமில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு மருத்துவம் பார்த்து பயனடைந்தனர். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் குடிநீர், காபி, தேநீர், பால் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



## பழனி பெருநகராட்சி 7வது வார்டு சார்பாக சிறப்பு கூட்டம் நடைபெற்றது

திண்டுக்கல், அக்.28-

திண்டுக்கல் மாவட்டம பழனி நகருக்கு பல்வேறு வளர்ச்சி திட்டங்களை மேற்கொண்டு வரும், பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார். ஆணைக்கிணங்க கூட்டத்தின் வாயிலாக கலந்து கொண்ட அனைத்து பொதுமக்களுக்கும் நிர்வாகிகளுக்கும் பாராட்டுக்களும் நன்றிகளும் தெரிவித்தனர்.

பெருநகராட்சி சார்பாக 7வது வார்டில், மூத்த நகர் மன்ற உறுப்பினர் கே.சுரேஷ் தலைமையில், பொதுமக்கள் பங்கேற்போடு சிறப்பு கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில்

நகராட்சி ஆணையர் டிட்டோ, நகராட்சி பொறியாளர் ராஜவேல், எஸ் ஓ செந்தில்ராம், ஆகியோர் கலந்து கொண்டனர். 7வது வார்டில் அடிப்படைத் தேவைகள் பற்றி பொதுமக்கள் கருத்துக்களை தெரிவித்தனர். தொடர்ந்து மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. நகராட்சி பணியாளர்கள் உட்பட வார்டு பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்



## வேலூர் ஆட்சியரகத்தில் 10 மாற்றுத் திறனாளிகளுக்கு தலா ரூ.14495 மதிப்புள்ள பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட கைத்திறன் கைபேசிகளை தகுதியான பயனாளிகளுக்கு ஆட்சியர் வழங்கினர்

வேலூர், அக்.28-

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைப்பெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் பெறப்பட்ட மனுக்கள் மீது தீர்வு காணும் வகையில் 10 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.14,495/ வீதம் பார்வையற்றோருக்கான பிரத்தியோகமாக வடிவமைக்கப்பட்ட ரூ.1,44,950/ மதிப்பிலான கைத்திறன் பேசிகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் த.மாலதி, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் ச.பாபு மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள், பயனாளிகள் உட்பட பலர் உடனிருந்தனர்.

### மதுரை மாவட்டம் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் சார்பில்

## வேளாண் உட்கட்டமைப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ.2 கோடி மதிப்பில் மானியத்தில் கடனுதவி பெற்று அமைக்கப்பட்ட தேனீ வளர்ப்பு மையத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்

மதுரை, அக்.28-

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு வட்டம், பொய்கைகரைப் பட்டியில் மதுரை மாவட்டம் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் சார்பில் வேளாண் உட்கட்டமைப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ.2 கோடி மதிப்பில் மானியத்தில் கடனுதவி பெற்று அமைக்கப்பட்ட தேனீ வளர்ப்பு மையத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார்,இ.ஆ.ப., குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார்,இ.ஆ.ப., தெரிவிக்கையில்,

பொதுமக்களிடையே இயற்கை உணவுப் பொருட்கள், பாரம்பரிய விவசாயம் மற்றும் ஆரோக் கியமான வாழ்க்கை முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த புதிய முயற்சியினை மதுரை மாவட்ட நிர்வாகம் எடுத்து அதன் தொடர்ச்சியாக"மாமதுரை "இயற்கை மதுரை" என்ற கருப்பொருள் அடிப்படையில் இயற்கை பஜார் கண்காட்சி மற்றும் விற்பனை மதுரை தமுக்கம் மைதானத்தில் இரண்டு நாட்கள் 200 அரங்குகள் அமைத்து நடத்தப்பட்டது.



இக்கண்காட்சி பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றது. இயற்கை பஜார் அரங்கத்தில் ஜோஸ்பின் அவர்கள் தங்களது நிறுவன தேன் தயாரிப்பு பொருட்கள் காட்சிப்படுத்தினார். ஒரு ஆண்டிற்கு ரூபாய் 10 கோடிக்கு மேல் தேன் தயாரிப்பு மற்றும் விற்பனையில் செய்து வருகிறார். ஜோஸ்பின் அனைவருக்கும் முன் உதாரணமாக திகழ்ந்து வருகிறார்.

விவசாயிகள் அனைவரும் தங்களுக்கு அருகில் இருக்கக்கூடிய வேளாண்மை அலுவலகத்திற்கு சென்று அரசு திட்டங்களை முழுமையாக தெரிந்து கொள்ள வேண்டும். அண்ணல் அம்பேத்கர் சாம்பியன்ஸ் திட்டம் மூலம் ரூபாய் 1 கோடிக்கும் மேல் மானிய விலையில் கடன் உதவி வழங்கப்படுகிறது. இது போன்ற பல்வேறு திட்டங்கள் மூலம் மானிய விலையில் கடன் உதவி பெற்று புதிய தொழில் தொடங்க வாய்ப்பு உள்ளது என தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த பயனாளி ஜோஸ்பின் தெரிவிக்கையில்,

என்னுடைய பெயர் ஜோஸ்பின். நான் மதுரையில் பொய்கைகரைப் பட்டியில் தேனி வளர்ப்பு பண்ணை வைத்திருக்கிறேன். 2006 ஆம் ஆண்டில் பத்து பெட்டியில் தேனி வளர்ப்பு ஆரம்பித்து இப்பொழுது பத்தாயிரம் பெட்டிகளில் பெரிய அளவில் தேனீ வளர்ப்பு செய்து வருகிறேன். 50 வகையில் தேன்களை ஐந்து ரூபாய் பாக்கெட்டுகளில் சின்ன கிராமங்களுக்கு விற்பனை செய்கிறோம். தேன் கலந்த ஐஸ்கிரீம் மற்றும் குளிர்பானங்களை அறிமுகப்படுத்தியுள்ளோம். கிராமப்புறம், நகர்ப்புறம் என அனைத்து பகுதிகளிலும் உள்ள எல்லா மக்களும் தேனை சுவைக்க வேண்டும் என்பதை என்னுடைய ஆசை. 2010 ஆம் ஆண்டு மானியத்தில் 10 இலட்சம் கடன் உதவி பெற்று இத்தொழிலை துவக்கினோம். தற்போது வேளாண் உட்கட்டமைப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ.2 கோடி மதிப்பில் தேனீ வளர்ப்பு மையம் மற்றும் அதன் மதிப்புக்கூட்டு மையத்தினை ஆரம்பித்துள்ளேன். மதுரை மாவட்ட நிர்வாகம் சார்பில் அக்டோபர் மாதத்தில் மதுரை தமுக்கம் மைதானத்தில் இயற்கை சந்தையில் இயற்கையாக விளைவிக்கப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்த அமைக்கப்பட்டிருந்த அரங்கில் எங்கள் நிறுவனத்திற்கு அரங்கு வழங்கி எங்கள் நிறுவனத்தின் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும் பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்கும் ஒரு வாய்ப்பாக அமைந்தது. சிறிய விவசாயிகளாகிய எங்களை மாவட்ட நிர்வாகம் அழைத்து பெரிய அளவில் முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். மேலும் தோட்டக்கலைத்துறை, வேளாண்மைத்துறை என அனைத்து துறைகளும் மிகவும் உதவியாக இருந்து விவசாயிகளுக்கு வழிகாட்டுகிறார்கள். நானும் இரண்டாவது மற்றும் நான்காவது சனிக்கிழமை வழிகாட்டும் பயிற்சி நடத்தி சுமார் 8,000 தொழில் முனைவோர்களை உருவாக்கியுள்ளேன். எனவே விவசாயிகள் அனைவரும் தமிழ்நாடு அரசு வழங்கும் திட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்தி பொருளாதாரத்தில் மேம்பட்டு பயன்பெற வேண்டும். உன்னதமான திட்டத்தை உருவாக்கி தந்த முதல்வருக்கு எங்களது நெஞ்சம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

வெளியீடு செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161